✓ The Registrar of Books,
Madras 6.

323

323
4.51.

ப...வு எண் — ...5720 வெள்ளிக் கிழமையில் குருகுலத் தாள்

முல்லைக்கொடி

கிழமை வெளியீடு :- சான்றாண்மை இதழ்.

ஆசிரியர் : இளவழகனார்.

கிளை—௫	குருகுலம், மாம்பாக்கம்; கர, ஆவணி; 17—8—51.	தளிர்—௪௪

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
1-NOV 1951
MADRAS

"குணநலம் சான்றோர் நலனே; பிறநலம்
எந்நலத் துள்ளதூஉ மன்று"

"கடனென்ப நல்லவை யெல்லாம்; கடனறிந்து
சான்றாண்மை மேற்கொள் பவர்க்கு."

சொற்களோடு வாசம்

சிறுவனாக இருந்த காலத்தும், வாலிபனாக இருந்த நாட்களிலும், என்னை ஓர் 'ஊர்சுற்றி', 'சோம்பேறி' என்ற நிலையிற்றான் மக்கள் அறிந்தும், குறிப்பிட்டுப் பேசியும் வந்தனர். எனினும், நான் என் கருத்துக்கிசைந்த தனிப்பட்ட நோக்கமான அறிவு நூல்களைக் கற்றல், எழுதல் ஆகிய இருவகைச் செயல்களில் எஞ்ஞான்றும் ஒழிவின்றி முயன்ற வண்ணம் இருப்பதுண்டு. படிப்பதற்கும் எழுதுவதற்குமாக இரண்டு புத்தகங்கள் எப்பொழுதும் என்னிடம் இருக்கும். வழியே செல்லும்போது காணும் காட்சிகளைப் பொருத்தமான சொற்களைக் கொண்டு கோவையாக அமைக்கும் செயலில் என் உள்ளம் பெரிதும் முனைந்து நின்றது. சாலையின் மருங்கில் மாலை வேளையில் தங்க நேரின் ஏதாவதொரு நூலைப் படிப்பதோ அன்றிக் குறிப்புப் புத்தகத்தில் காணும் காட்சிகளை எழுதுகோலுதவியால் எழுதுவதோ ஆகிய வேலைகளில் என் உள்ளம் ஈடுபடுவதுண்டு. அல்லது ஏதேனும் இனிய காட்சியைப் பொருத்தமான சொற்களால் கோவையாக அமைத்துப் பாக்களாகப் புனைந்து மகிழ் கூர்வேன். எனவே அந்நாட்களில் நான் சொற் குலங்களோடு வாசம் செய்தேன் என்னலாம். அந்நிலையில் நான் எழுதியன யாவும் வருங்காலப் பெரும்பயன் குறித்து எழுதியவையல்ல. பயிற்சி மிக வேண்டும் என்பதே என் நோக்கமாகும். பிற்காலத்தில் ஒரு நூலாசிரியனாகத் திகழவேண்டும் என்பதும் (அம்மாதிரி ஆவதற்கும் விருப்பம் உண்டேனும்) என் குறிப்பன்று. நன்றாக எழுதப் பழகவேண்டும் என்ற விடாப்பிடியே என் முயற்சிக்குக் காரணம். அவ்வுறுதி எக்காலத்தும் எனக்கு உறுதுணையாய் நின்று ஊக்கியது. என் உள்ளத்தோடு இவ்வகையிற் போட்டியிட்டேன்: வெற்றியும் பெற்றேன்.

[சி. து. க.] R. L. Stevenson.

‘நற்றிணை’ அழகு

[R. G. பிள்ளை B. A.]

உணவு, உடை, உறைவிடம் இம்மூன்றும் மக்களுக்கு இன்றியமையாதவை. இம்மூன்றனுள் உணவு தலையாயது. உணவுற்பத்தி யில்லாத நாடு வெகு விரைவில் கேடுறும். இக்காரணம் பற்றியே, நம் ஆட்சியாளர் உணவுற்பத்திப் பெருக்கத்தின் தேவையைக் குடிகளுக்கு மீண்டும் மீண்டும் வற்புறுத்துகின்றனர். காலக் கொடுமையால் அத்தகைய பிரசாரமும் நங் காலத்தவர்க்கு அவசியமாகி விட்டது.

தமிழ் நாடு இன்றுவரை பயிர்த் தொழில் நாடாகவே இருந்து வருகிறது. தமிழர், தம் உழைப்பால் காடு காம்புகளைத் திருத்தி, வரப்பெடுத்து வயல்களாக்கி அவற்றைப் பன்முறை உழுது, நீர் பாய்ச்சி, உணவுப் பண்டங்களை உற்பத்தி செய்தனர். அவர்களால் அவ்வாறு திருத்தப்பட்ட நிலம் மருத நிலமாயிற்று; மருத நிலத்திற் குரிய மக்கள் உழவர்களானார்கள். உழத்தல் என்னும் தமிழ்ப் பதம் வருந்துதல் என்னும் பொருளைக் கொண்டது. மெய் வருந்தச் செய்யும் தொழில் உழவுத் தொழிலாயிற்று. மற்றெல்லாத் தொழில்களையும் விட உழவுத் தொழிலே சிறந்த தென்பார்.

“சுழன்றும் ஏர்ப்பின்ன துலகம்
அதனால்
உழந்தும் உழவே தலை”

என்று திருவள்ளுவர் கூறினர்.

கடைச் சங்க காலத்து உழவர்களின் நிலையைப் பின்வரும் நற்றிணைச் செய்யுள் விளக்குகின்றது:—

“மலைகண் டன்ன நிலைபுணர்
நிவப்பிற்
பெருநெற் பல்கூட் டெருமை
யுழவ
கண்படை பெறாது தண்புலர்
விடியற்
கருங்கண் வராஅற் பெருந்தடி
மிளிர்வையோடு
புகர்வை யரிசிப் பொம்மற்
பெருஞ்சோறு
கவர்படு கையை கழும மாந்தி
நீருறு செறுவி னாறுமுடி
யழுத்தநின்
னடுநரோடு சேறியா யின்வண்
சாயு செய்தலு மோம்புமதி
யெம்மின்
மாயிருங் கூந்தல் மடந்தை
யாய்வளைக் கூட்டு மணியுமா
ரவையே”

தாம் உற்பத்தி செய்த நெல்லை உழவர்கள் அம்பாரங்களாய்க் குவித்தனர். அம்பரம் என்பது வானத்தைக் குறிக்கும். அம்பரத்தை முட்டு மளவு குவித்த நெற்குவியல் அம்பாரமாயிற்று. ‘மலைகண் டன்ன நிலைபுணர் நிவப்பில் பெருநெற் பல்கூட் டெருமை யுழவ’ என்றமையான் உழவர்கள் அக் காலத்தில் பெரிய நெற் குவியல்களைச் சேமித்து வைத்தார்களெனத் தெரிகிறது. குன்றுகளைப் போன்ற நெற்குவியல்களைக் கொண்டு விளங்கிய மருத நிலம் குறிஞ்சி நிலத்தை ஒத்தது என்று திணை மயக்கங் கூறவந்த சேக்கிழார்,

“வைதெரிந் தகற்றி ஆற்றி மழைப்
பெயல் மானத் தூற்றிச்
செய்யபொற் குன்றும்வேறு
நவமணிச் சிலம்பும் என்னக்
கைவினை மள்ளர் வானங் காக்க
வாக்கியநெற் குன்றால்
மொய்வரை உலகம் போலும்
முளரிநீர் மருதவைப்பு”

என்று தாமியற்றிய பெரிய புராணத்திற் பாடினர்.

‘பல்கூட்டு’ என்ற சொற்றொடரை ‘நெல்’, ‘எருமை’ என்ற இரு சொற்களுக்கும் அடையாக்கலாம். ‘பல் கூட்டெருமை யுழவ’ என்றமையான், உழவர் எருமை இனங்களைத் தம் உடைமைப் பொருளாகக் கொண்டிருந்தார்களென்றும், அவற்றை ஏர்களிற் பிணித்து நிலங்களை உழுதார்களென்றும் காணக் கிடக்கிறது.

வருங்கால உணவிற்கெனப் பெரிய நெற்குவியல்களைச் சேமித்து வைத்த உழவன் கவலையின்றி உறங்கலாமன்றோ? ஆனால், அவனுக்கு இரவில் தூக்கமே கிடையாது. குளிரையும் பொருட் படுத்தாமல் அவன் விடியற் காலையில் தன் படுக்கையை விட்டு எழுந்து விடுகிறான். வெயிலேறுவதற்கு முன், தன் நிலத்தை உழுது, நீரைத் தேக்கிச் சேடை கூட்டி, அவன் நாற்று நட வேண்டும். வெயிலேறி விட்டால் தனக்கும், ஏர் பூட்டிய எருமைக்கும், தேகத்தில் உண்டாகும் அயர்வு கருதி, அவ் வுழவன் தன் வேலையைக் காலையிலேயே செய்து முடிக்க விழைகின்றான்.

நாற்று நடுவதற்கு விடியற் காலையிற் புறப்படுமுன் உழவன் உணவு

[தொடர்ச்சி 8-ம் பக்கம்]

நஞ்சன்கூடு பல்பொடி.

பாக்டெரியாரின்

யுனைடெட் கன்ஸர்ன்,
54, பந்தர் தெரு, :: சென்னை-1.

“இருள்”

(பா. வரதராசன்)

நடு நிசி, ஏதோ ஒரு தீக்கனக் கண்டு திடுக்கிட்டு விழித்தெழுந்தேன். புற இருளைப்போலவே அகத்தும் ஓர் இருள் பீடித்திருந்தது.

தடைப்பட்ட துயில் மீண்டும் வர மறுத்தது. பன்முறை படுக்கையில் புரண்டாயிற்று. மனத்தை ஏதோ ஒரு விசாரம் பீடித்திருந்தது. மெள்ளப் படுக்கையை நீத்தெழுந்து வெளியே வந்தேன். பின்னிரவு இரண்டு மணி இருக்கலாம். எங்கும் அமைதி. வானம் முகிற் படலங்களின்றித் தூய்மையாய் இருந்தது. மின் ஒளிகள் யாதொரு தடையுமின்றிப் பளிச்சென்று பிரகாசித்தன. நில மகளுக்கு வாய்த்த இயற்கைக் குடையில்தான் எவ்வளவு அழகிய பூ வேலைப்பாடுகள்!

அது பூர்ணிமை கழிந்த ஒன்பதாம் நாள். எழு கலைகளைக் கொண்ட சந்திரன் வானத்தின் உச்சியை நோக்கி மெள்ளத் தவழ்ந்துகொண்டிருந்தான்; எதையோ பறிகொடுத்தவன் போல் பூர்ணிமை நாளில் அவனுக்கிருந்த அந்தப் பொலிவு எங்குச் சென்றது!

எங்கோ அடைபட்டிருந்து விடுபட்டுவந்ததைப்போல் காற்று, சற்று வேகமாக முகத்தைத் தாக்கியது. தெருவோரத்திலிருந்த புன்னை மரத்தின் தடித்த இலைகள் சல சல வென்று அசைந்தன. அப்போது தான் பூத்துக் குலுங்கும் பவழமல்லி மரத்திலிருந்து நறுமணம் மூக்கைத் தொளைத்து மனத்தைக் குளிர்வித்தது.

யாது காரணம் பற்றியோ பிரமை கொண்டிருந்த மனத்தை அமைதிப்படுத்த, சிறிது உலாவி வர எண்ணி வீதியில் நடந்தேன்.

அது ஒரு சிறிய கிராமம். அந்த ஊரில்தான் நான் பிறந்து பதினொரு வயது வரை வளர்ந்தது. ஆரம்பப் படிப்பு முடிந்ததும், அருகிலிருக்கும் நகரத்துக்குச் சென்று படித்து வந்தேன். பின்பு அங்கேயே அலுவல். இந்தக் கிராமத்தை விட்டு இன்றைக்கு ஏறக்குறைய பதினேழாண்டுகள் கடந்து விட்டன. இடையிடையே சில நாட்கள் வந்து தங்கிப் போவதுண்டு.

புழுதி நிறைந்த தெரு. இரு மருங்கிலும் கூரை வேய்ந்ததும் ஓடு வேய்ந்ததுமான சிறு சிறு வீடுகள். கனவு நிலையில் நடப்பதைப் போல் மெள்ள நடக்கின்றேன். சிறிது சிறிதாக உணர்வு தெளிவுற்றுக் கொண்டிருந்தது. அப்போதுதான் என் இளமையின் விளையாட்டுத் தோழியான இராஜேஸ்வரியின் வீட்டின் அருகில் வந்துகொண்டிருந்தேன். உள்ளம் திடீரென்று விழிப்படைந்தது. அந்தச் சிறு வீடு மூடிக்கிடந்த அந்தப் பழைய கதவு இவைகள் உள்ளத்தில் ஏதோ ஒரு சொல்லொணுக் கிளர்ச்சியைக் கிளர்ந்தன. கால்கள் தம்மையறியாது ஒரு கணம் தாமதித்தன. கண்கள் அகல விரிந்து அவ்வீட்டையே நோக்கின. மனத்தின் அடியிலிருந்து சோகங் கலந்த ஒரு பெருமூச்சு.

இராஜேஸ்வரி பதினேழாண்டுகளுக்கு முன் என் விளையாட்டுத் தோழி. நான் நகரத்துக்குப் போன பின் சில ஆண்டுகள் கழித்து ஒரு முறை கிராமத்துக்கு வந்திருந்தேன். ஒரு மாலை அவ் வீதி வழியே செல்ல நேர்ந்த போது தற்செயலாக இராஜேஸ்வரியைக் காண நேர்ந்தது. வாயிற்படியண்டை, கதவைப் பிடித்துக் கொண்டு நின்றிருந்தாள்! என்னை அறியாமலேயே திடுக்கிட்டேன். எவ்வளவு மாறி இருந்தாள். பூத்துக் குலுங்கிய அவள் வனப்பு உள்ளத்தைக் கலக்கக்கூடியது. அவள் பார்வை உயிரை வாட்டும் வகையது.

இப்போது அவள் பட்டணத்தில் யாருக்கோ வாழ்க்கைப்பட்டு இருக்கின்றாள். மூன்று குழந்தைகள் ‘அம்மா’ என்று அழைக்கும் பெருமிதத்துடன் வாழ்கின்றாள். ஆயினும் அவ் வீடு ஏதோ ஒரு பழைய இன்பத்தை நினைவூட்டி நிற்கின்றது.

கால்கள் மேலே நகர்ந்தன. உள்ளத்தே பற்பல சிந்தனைகள்; எரிக்கரை யோரத்தில் வந்து தாக்கும் சிறு அலைகளைப்போல் தாக்கிக்கொண்டிருந்தன.

தூக்கத்திலிருந்து விழித்துக் கொண்ட காக்கை ஒன்று திசை தெரியாது ஒற்றைக் குரலில் கரைந்து கொண்டு சென்றது. மெள்ள நடந்து தெருக்கோடி வந்து நின்றேன். அருகில் அந்தப் பெரிய அரசமரம்; எதிரே இளமையில் பயின்ற அந்த ஆரம்பப் பள்ளி.

அண்ணாந்து அவ்வரச மரத்தை உற்று நோக்கினேன். இள வேனில் முடிந்து முதுவேனில் ஆரம்பமானதால் புதிதாக விட்ட அதன் இலைகள் வெண்மை நிறம் மாறி அப்போது தான் கருமையை முழுமையாகப் பெற்று வந்தன. அதன் கிளைகளின் இடை வெளியே வானம் மின் ஒளிகளுடன் காட்சி அளித்தது.

திரும்பி, வந்த வழியையே உற்று நோக்கினேன். அமைதி கவிழ்ந்த வீதி; நிலவின் மங்கிய ஒளி.

ஊழிக் காலத்தின் அமைதியும் இருளும் இப்படித்தான் இருக்கும் போலும். பகலிலே,—ஒளியிலே,— இருக்கும் கலகலப்பு ஏன் இரவிலே —இருளிலே—ஓய்ந்துவிட வேண்டும்! இருளைத் தொடர்ந்தே ஒரு சோர்வும் மருளும் உடலுக்கும் உள்ளத்துக்கும் வருவது இயற்கையின் விந்தைகளில் ஒன்று போலும்!

இப்போது கவிழ்ந்திருக்கும் இது போன்ற ஓர் இருள்—மருள்தான் எப்படி மனித அறிவை நிரந்தரமாகக் கவிழ்ந்திருக்கின்றது!

ஆயிற்று, இன்னும் சில நாழிகை கழித்துப் பகலவன் குணதிசை வருவான். அவனுடனே, உறங்கிய கண்கள், மரங்கள் எல்லாம் மலரும். அறிவு சுருசுருப்புக் கொண்டு செயற்படும். ஆண்களும் பெண்களும் வீதியில் நடமாடுவார்கள். சிறுவர்களும் சிறுமியரும் இப் பள்ளி நோக்கி ஓடி வருவார்கள். நானும் இப்படித்தான் ஒரு காலத்தில் ஓடி வந்துகொண்

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

"எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே."
—புறநானூறு.

கிளை	கர, ஆவணி,	தளிர்
3	17-8-51 வெள்ளி	44

கிழமை வழிபாடு

திருக்கழுக்குன்றத்தில் ஜுலை 6,7,8 நாட்களில் நடைபெற்ற விழாச் செய்தியாகச் சென்ற கிழமை 'வழிபாடு செய்க!' என்ற தலைப்பில் சில குறிப்பிடப்பட்டன. இப்போது இன்னும் சில குறிப்பிடப்படுகின்றன.

திருமுறைப் பேரவைக்குத் தலைமை தாங்கிய சான்றோர் உயர்திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளை அவர்கள் தமது தலைமை உரையில் பல அரிய கருத்துக்களை உதிர்த்தார்கள். அருள் நெறியாளர்களில் 'இந்து' சமயத்தவர்களுக்குள் ஏற்பட வேண்டிய கட்டுப்பாடு, ஒழுங்கு, சமயக் காணிக்கை முறை, அரசியல் உணர்வு, தொண்டுணர்ச்சி, சீர்திருத்த நோக்கம், கால நிலையை ஒட்டிப் போகிற பண்பு முதலியனபற்றி எல்லாம் விரிவாகவும் அழுத்தம் திருத்தமாகவும் குறிப்பிட்டார்கள். உலகத்துக்கு நிலைகளை எடுத்துக் காட்டி எச்சரிக்கையும் செய்தார்கள். அதோடு இந் நல்லுணர்வுகளை மக்கள் பெறும்படி செய்வதற்கு ஏற்ற இரண்டு செயல் முறைகளையும் அவர்கள் வகுத்துச் சொன்னார்கள். அவற்றுள் ஒன்று பொதுவானது; ஆர்வமுடையோர் எங்கும் செய்யக் கூடியது. மற்றொன்று சிறப்பானது. செயலாற்றலும் தக்க சூழலும் உடைய அறிஞர்களும் சமய அமைப்புகளுமே செய்யக் கூடியது.

அவையாவன :

1. உணவு உடை, உலகியலறிவு முதலிய புற நலங்களிலும் ஒழுக்கம், அன்பு, அருளியல் அறிவு முதலிய அகநலங்களிலும் சீர்கெட்ட நிலையில் உள்ள உலகம் செம்மை நிலையடைய அருள் செய்ய வேண்டும் என்று இறைவனை நாடோறும் தனித்தும், கிழமைக்கு ஒருமுறையாவது அமைதியாகக் கிறித்தவ அன்பர்கள் போல் கூட்டு முறையிலும் அங்கங்கே வழிபாடு செய்தல்.

2. சமய நம்பிக்கை உடையவர்களை எல்லாம் ஆண்டு ஒன்றுக்குக் குறைந்த அளவு அணா நான்காவது சமய வளர்ச்சிக்கெனத் தருமாறும், அவ்வாற்றான் நூறாயிரக்கணக்கான அன்பர்கள் ஒரு தலைமையின்கீழ் மகம்மதிய கிறித்தவ மக்களைப் போல இயங்குமாறும், அவர்களுக்குள் ஒற்றுமையும், விழிப்பும், சீர்திருத்த நோக்கமும் உண்டாகுமாறும் செய்து நம் முன்னோர்கள் அரும்பாடு பட்டு எழுதியும் எடுத்தும் வைத்துள்ள அரிய பெரிய நூல்களையும், கோயில் குளங்களையும் பாதுகாத்து வரவும், சமய உண்மைகளையும், சமயத் தொடர்பான செய்திகளையும் எங்கும் பரப்பக்கூடிய நாள் கிழமை இதழ்களை நடத்தவும் முயலுதல்.

கூட்டுமுறை வழிபாடுகளை, நம்பிக்கை உள்ளவர்களை எல்லாம் திரட்டி ஆர்வமுடைய தொண்டர்கள் அங்கங்கே தம் ஆற்றலுக்கு ஏற்றபடி நடத்தி வரலாம். அதனால் மக்களுக்குள் நாளடைவில் நல்ல மன நலம் ஏற்பட்டு நாட்டில் நடைபெறும் பாவச் செயல்கள் குறையும். நன்மைகள் நிறையும்.

கூட்டு வழிபாடுகளை ஆற்றல் மிக்க சான்றோர்களும், சமய அமைப்புகளும் செய்தால் அவை மேல் மேல் விரிவாகவும் விளக்கமாகவும் நடைபெறும். இரண்டாவதாகச் சொல்லப்பட்ட உருவான செயல்களும் அவற்றினின்று மலரும்.

மேலே குறிப்பிட்ட செயல்களை எல்லாம் ஒருங்கே நிறைவேற்றக் கூடிய ஆற்றலும், சூழலும், ஆன்றோர் துணையும், முன்னோரின் எண்ண வலிவும் கருத்தும் உடையது, கழுக்குன்ற வழிபாட்டை முன்னின்று நடத்திய 'சென்னைச் சிவனடியார் திருக்கூட்டம்' என்பதை நன்கு அறிந்தே போலும் தலைவரவர்கள் இத்தகைய செயல் முறைகளைத் தமது சொற்பொழிவில் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

எனவே காலந் தாழ்க்காமல் சென்னையிலுள்ள சமய அமைப்புகளில் செயலாற்றுவதாக இருக்கிற மிகப் பழைய அமைப்பாகிய சென்னைச் சிவனடியார் திருக்கூட்டம், விரைவில் கிழமைக்கு ஒரு முறை இக் கூட்டு வழிபாட்டை நடத்துகிற பணியில் ஈடுபடுவது நல்லது. அங்கங்கே இத்தகைய வார வழிபாடுகளை நடத்தும்படி ஊக்கியும் முன்னின்று நடத்தியும் பண்பட்ட சைவத்திருவாளர். ச. சச்சிதானந்தம் பிள்ளை அவர்களைக் கொண்டே இதை விரைவில் தொடங்கலாம். கிழமைக்கு ஒரு கோயிலாகச் சென்னையிலுள்ள முதன்மையான கோயில்களில் எல்லாம் இவ்வழிபாட்டை நடத்திப் பின் பாடல் பெற்ற தொண்டை நாட்டுத் திருவூர்களிலும் இவ்வழிபாடுகளைத் தக்கோர் துணையுடனும், சமய விரிவுரைகளுடனும் தொடர்ந்து நடத்தலாம். திருவருளால் நாளடைவில் ஒரு பொதுச் சமய அமைப்பும், பல சமய இதழ்களும் உண்டாகும். நாட்டில் நல்ல சீர்திருத்தங்களும், கொள்கைகளும் உலவி நலம் செய்யும். செம்மையும் செழுமையும் பெருகும்.

வளர்க தொண்டு! வாழ்க சீர் அடியாரெல்லாம்!!

—ஆடலரசு,

Telegrams: "RAMBROS"

N. Ramu Bros;

GENERAL HARDWARE
MERCHANTS

AVANASHI ROAD,
COIMBATORE.

வெள்ளிக் கிழமை விளக்கும் விளக்கும் வைத்துவிட்டது. வழக்கமாக ஐந்து மணிக்கே எழுந்து வெளி வந்து விடுபவன், அன்று நகராண்மைக் கழகக் கட்டடத்தில் (Rippon Building) "டிங்...டாங்...டிங்... டாங்" ஏழே கால், ஏழரை, ஏழே முக்கால் என மணி அடித்துக் கொண்டே போயிற்று. வேலை முடிந்த பாடில்லை; மணி எட்டும் அடித்து விட்டது; இருந்த இடத்தை விட்டு எழுந்து மாடியிலிருந்து கீழே இறங்கினேன்; இறங்கியும், மனம் ஒருமைப் படவில்லை. ஏதேதோ வேலையின் பொருட்டு மனம் குழம்பிக்கொண்டேயிருந்தது. அதே நினைவில் நேராக வீட்டை நோக்கி வந்து விட்டேன்.

வாரந்தோறும் வெள்ளிக் கிழமையில் கந்தகோட்டம் வந்து முருகப் பெருமானை வணங்கிக் கொண்டு, பூ, பழம் வாங்குவதற்காகப் பூக்கடைப் பக்கம் வருவேன். யான் விரும்பி வாங்கும் பூக்கள் மல்லிகை, முல்லை, ரோசா இவைகளாகும். காதலியும், கதம்பத்தையும், காகிதப் பூவையும் குழந்தைகட்குங்கூட வாங்கமாட்டாள். முல்லைப் பூ வொன்றுதான் அவளுக்கு மிகுந்த மகிழ்ச்சி தரக்கூடியது.

இதனிலும் மேலாக அவள் விரும்புவதும், மகிழ்வதும் ஒன்று உண்டு... என்றால்,—அதுதான் செந்தமிழை வளர்க்கும் 'முல்லைக் கொடி' என்ற வார இதழாகும். யான் முல்லைப் பூவை வாங்கிவர மறந்தாலும் மறக்கலாம்; முல்லை வார இதழை வாங்க மறந்து விட்டால் எங்கள் வாழ்க்கையே அவ்வளவுதான்... 'முல்லைக் கொடி' இதழை யான் வாங்கி வருவதைப் பார்த்து விட்டால், அவள் மனம் மட்டற்ற மகிழ்ச்சியடையும்—அப்பொழுது அவள் முகத்தில் தோன்றுகின்ற முல்லை நகை என் மனத்தையும் மகிழ்விக்கும். குருகுலச் செய்கைகளில் அவ்வளவு ஊக்கம் இருந்து துன்பஞ் சுழன்ற வாழ்க்கையில் இந்த இன்பமே ஒரு சிறிது ஆறுதலளித்து மகிழ்விப்பதுமாகும்; இல்லையெனில், இவ்வுலகில் வாழ்வேயில்லை...என அப்பொழுது எண்ணுவேன்.

"முல்லை நகை"

(வே. சா. ஏ.)

இதனால், 'முல்லை' வார இதழை மறக்காது வாங்கிவருதல் வழக்கம். யான், அதை மறந்தாலும் அவ்விடத்தில் பூ விற்பவர் "முல்லை...முல்லை" என்று கூவி முல்லை வார இதழை எனக்கு நினைவூட்டுவர். முல்லை வருகின்ற வெள்ளிக் கிழமையில், எங்கள் இல்லமே இன்பகரமாக இருக்கும். நாங்களும் வெள்ளிக் கிழமையை எதிர்பார்த்த வண்ணமே இருப்போம்.

இப்படி யிருந்துவந்த எங்களைப் பாழாய்ப்போன அன்றைய வேலை வந்து கெடுத்து விட்டது. வேலையிலிருந்து நேராக வீடு வந்ததும் காதலியைக் கண்டேன். அவள் முகத்தில் வழக்கம்போல் புன்னகை தவழவில்லை; முணுமுணுத்துக் கொண்டே முகத்தையுஞ் சுளித்துக் கொண்டாள்.

நெடுநேர வேலையால் களைப்புஞ் சலிப்புங் கொண்டிருந்த எனக்கு இது பெருத்த வேதனையாகவே இருந்தது. இப்படி வேதனை கொண்டிருந்த என்னை, அவள் முணுமுணுப்புடன் கூடியமுகம் தன்னையு மறியாமல் ஏதேதோ சொல்லும்படி செய்து விட்டது.

பிறகு, சிறிது நேரம் இருவரும் மௌனஞ் சாதித்தோம். உணவுங் குறிப்பறிந்து இடப்பட்டது. உண்ட பிறகும் அவள் முகத்தில் மாறுதலில்லை.

அதைக்கண்ட யான் அவளைப் பார்த்து, "என்ன வேண்டும்? சொல், இப்பொழுதே வாங்கி வருகிறேன் என்றேன். அப்பொழுதுதான் அவள் முகத்தில் குறு நகை தோன்றிற்று. அவளது முல்லை போன்ற நகை, எனக்கு 'முல்லை'வார இதழை நினைவூட்டிவிட்டது.

உடனே கடைக்குச் சென்று 'முல்லை' இதழை வாங்கிவந்து கொடுத்தேன். பிறகு வழக்கம்போல் வெள்ளிக் கிழமையுங் கழிந்தது.

நேரிசை வெண்பா

நல்ல அழகுடன் நாறு மலர்களில்
அல்லியொடு முல்லை அரவிந்தம்—இல்லாளின்
அல்லி விழியுணர்த்தும் அங்கை மரையுணர்த்தும்
முல்லை யுணர்த்தும் முகம்.

அழகும் மணமும் பொருந்திய மலர்களிலே அல்லி, முல்லை, தாமரை என்ற இம் மூன்றை—இல்லாளின் விழி அல்லியையும், கை தாமரையையும், முகத்தின் முறுவல் முல்லையையும், முல்லை வார இதழையுமுணர்த்து மென்பதாம். 'இல்லாளின்' என்ற சொல்லை இல்லாளின் விழி, இல்லாளின் அங்கை, இல்லாளின் முகம் என மூன்றிடத்தும்; விழி அல்லி யுணர்த்தும்; முகத்தின் முறுவல் முல்லை யுணர்த்தும் எனவுங் கூட்டுக.

மரை என்பது அங்கை யுணர்த்தும் என்றதனாலும், மேலே 'அரவிந்தம்' என்ற சொல் வந்துள்ளதனாலும் தாமரையையே சுட்டும் முகம் என்றது, முகத்தின் நகை அல்லது முறுவலை உணர்த்திற்று.

இந் நிகழ்ச்சியால், மாதர் பிறர்க்கும் குருகுலத்தின் கிழமை இதழாகிய 'முல்லைக் கொடி'யிலும் அதன் மொழியிலும் கொள்கைகளிலும் ஊக்கம் இருக்குமென்று தோன்றுகிறது; மேலும், மாதர்களாலும் முல்லைக் கொடி தழைத்துப் பரவி வரலாமென்றும் தோன்றுகிறது.

மாதர்களின் நிலை வரவர உயர்ந்து வருகின்றது; அதனால், நாட்டுக்கும் மொழிக்கும் ஏனை நன்மைகட்கும் வரவர நலங்கள் உயருமென்றும் நம்பலாம். ஒவ்வொரு மாதமும் இப்படியே முல்லைக் கொடியின் பயன் கொள்வதில் அன்பும் உறுதியும் பூண்டிருந்தால், ஆ, ஒவ்வோர் இல்லமும் முல்லை தழைத்துப் பூத்துக் குலுங்கி தமிழின் நறுமணமும் அருளின் பெருங்கோலமும் மிகுந்து மாதிரி இல்லங்களாக வன்றோ திகழும்.

சிவநேயப் பெருஞ் செல்வரும், சிவபூசைத் துரந்தரருமான

மரக்காணம்

எக்கிய சிங்காரவேல் முதலியார் அவர்களுக்கு

16—8—51ல் நிகழ்ந்த அறுபான் ஆண்டு நிறைவின்
அமைதித் திருநாளன்று,

துருதலம் வழங்கிய

வாழ்த்து

சீரோங்கு மணமெல்லாஞ் செழும்புன்னை மலர்சிதறுஞ் செய்ய முன்றிற்
காரோங்கு நெடுங்கரத்திற் கடனுரையூ டெழுந் துதவழ் கவிஞர் சங்கம்
ஏரோங்கு முத் துயிர்க்கு மியலோங்கு நெய்தல்வளம் இயைந்த நல்லூர்
பேரோங்கு மரக்காணப் பெரும்பதியென் றறிஞரெலாம் பேசா நிற்பர். 1.

மங்காத சீர்த்தியினம் மரக்காணச் சான்றோர்க்குள் மதித்தற் கான
தங்குமுளச் சீர்த்தியினர் தனிக்குடிமை யொழுக்கொடுபே ராண்மை சான்ற
சிங்கார வேலனர் சிந்தைபெற நினைப்பவெலாம் செம்மை யாக
பொங்குயிர்பால் அருள்கெழுமிப் புண்ணியஞ்சால் நெறியோவாப் புகழின்
பாலார். 2.

மண்ணுலகில் வாழ்வளிக்க மகிழ்வேளாண் குடிதழைக்க வந்து தோன்றி
எண்ணமரிற் றியலுநலத் தேர்ந்திழையார் துணைகெழுமி ஏற்ற பெற்றி
தண்ணிலவு மனையறங்கள் புரிந்தறிவின் தனிச்சீரில் தவழு மக்கள்
கண்ணனையார் பலர்தோன்றிக் களிப்பருளக் கண்ணுதலான் கருணை
யோர்வார். 3.

கண்ணொரு நெற்றியினன் காதலடி யவர்க்கடிமை கலந்த நெஞ்சம்
வெண்ணீறு சண்ணித்த மேனியுமச் சிவநெறிக்கண் விளங்கும் பண்பும்
மண்ணார்ந்த பிறப்பருமை வயங்கிடவெம் மான்புகழ்கள் வழுத்து நாவும்
எண்ணார வியைந்ததிலை எக்கியசிங் காரவேல் என்னும் சீரார். 4.

எம்மானை யேத்தாத நாளேது மில்லையென இயைந்த வாழ்வில்
செம்மாந்து பெருநிலைச்சீர்ச் செழுங்கிழமை திருமரபிற் சிறக்க வாய்ந்து
விம்மாத பெருஞ்சுற்றம் விம்மிதங்கூர் உள்ளத்தின் விளங்கி யோங்க
அம்மா!வின் றறுபதெனும் ஆண்டெல்லை யணுகிமகிழ் வடைகின் றாரால். 5.

தாம்பெற்ற வின்பமெலாம் தனிச்சுற்றத் தோடுலகுந் தாம்பெற் றோங்க
வான்பெற்ற பேரமிழ்தம் வையத்தில் நிறைந்ததென மகிழ்ச்சி வெள்ளம்
மான்பெற்ற திருக்கரத்தார் மாணருள்போல் செழித்தோங்க மரக்கா ணத்தில்
தேன்பெற்ற தொடையலணி திருமணச்சீர் தந்துளத்தின் செழிப்புங்
கொண்டார். 6.

தொன்மனைச்சீர் குன்றாத துணைச்செல்வி, தூமடவார் தொழுது போற்றும்
பொன்னனையார் மலைபயந்த பூவையெனும் புண்ணியச்சீர் பூத்த நல்லார் . . .
இந்நிலைபோல் எந்நாளும் இயலறத்தின் துணையாக இன்பம் வாழச்
செந்நெறியில் வாழகநல் விருவோரும் திருமேவிச் செழிக்கப் பன்னாள். 7

இயற்றியோர்: கவிஞர் சி. து. கன்னிசாமி அவர்கள்.

முருகவேள் திருமுறைகள்

முதல் பகுதி வெளிவந்தபின், மேலும் பெயர்ப் பதிவுகள் சேர்ந்து வருகின்றன. குறித்த அளவு சேர்ந்தபின், வெளியீடுகள் தொடர்ந்து வெளிவரும்.

இத் திருமுறைகள் பகுதி பகுதியாக வெளிவருதலை விட, தொகுதி தொகுதியாக அட்டைக் கட்டுச் செய்து வெளிவருதல் கையாளுதற்குத் தகுதியாயிருக்கும் என்றும், அஞ்சலில் வருவிப்பதற்கும் செலவு குறையும் என்றும் சிலர் கருத்து அறிவிக்கின்றனர். அவ்வாறே செய்ய வெளியிடுவோர் இசைந்துள்ளனர்.

நான்கு பகுதிகள் சேர்ந்த தொகுதி ஒன்று (400 பக்கங்கள்) ரூபா 5-0-0 விலையாகும். வாங்குவோர்க்குக் கட்டுச் செய்யும் தனிச் செலவு அப்போது இல்லை. நான்கு திங்களில் நடைபெறும் பணி, இரண்டு திங்களில் நிறைவேறும். பல வெளியீடுகள் இங்ஙனம் தொடர்ந்து விரைவில் வெளிவருதற்கும் வாய்ப்பாயிருக்கும்.

ஆதலால், முருகவேள் திருமுறை அன்பர்கள், தொகுதியாகவே இனிப்பெற்றுக்கொள்ளலாம். விரும்பும் அன்பர்கள் அதற்குரிய விலை ரூபா ஐந்தை முன்னால் அனுப்பி ஒவ்வொரு தொகுதியையும் பெற்றுக் கொள்வார்களாக!

வாங்குவோர் எண்ணிக்கை போதியது அமைந்தால் ஆவணித் திங்களிலேயே முதல் தொகுதியை வெளியிடலாகும்.

குறிப்பு:-முதல் பகுதியை வாங்கிக் கொண்டவர்கள், முதல் தொகுதியில் அடங்கும் ஏனை மூன்று பகுதிகளையும் தனித்தனியே பெற விரும்பினும் அவர்களுக்கு அவ்வாறே அனுப்பி வைக்கப்பெறும்.

—குருகுலத்தார்.

கசடறக் கற்க

(முத்துசாமி)

அறம் பொருள் இன்பம் வீடு பயப்பனவாகிய, சிறந்த சான்றோர்களால் எழுதப்பட்ட நூல்களை ஒரு நல்லாசிரியரை யடுத்துக் கற்றல் வேண்டும். ஐயம் ஏற்படின் அவ்வாசிரியரைக் கேட்டுத் தெளிந்து கொள்ளுதல் வேண்டும் இங்ஙனம் கற்றால் மட்டுமே ஐயம் திரிபு என்ற இரண்டு கசடுகள், அதாவது குற்றங்கள் நீங்கும். ஐயம் என்பது ஒன்றன் பொருளை இதுவோ அதுவோ என்று 'சந்தேகம்' கொள்ளுதல். திரிபு ஒன்றன் பொருளைத் தவறாக வேறொன்றென்றே முடிவாய்த் துணிதல்.

உயர் குடிப்பிறப்பு, அருள், கடவுள் வழிபாடு இவைகளாலான மேன்மையும், பல நூல் பயின்ற தெளிவும், எளிதில் உணரும்படி கற்பிக்குந் திறனும், நிலம் மலை நிறைகோல் மலர் இவை போன்ற தன்மைகளும் உடையவனே நல்லாசிரியன் எனப்படுபவன் என்பது நம் முன்னோர் கருத்து. இத்தகு பண்பிற் சிறந்த நல்லாசான் கிடைப்பின் ஒரு மாணவன் பெறும் பேற்றுக்கு ஈடாய் எதனைக் கூற முடியும்?

நம் தமிழ் நாட்டுப் புலவர்களெல்லாம் இத்தகைய சிறப்புடைய ஆசிரியரையடுத்துப் பயின்றவர்களே. இக்காலப் பள்ளிகளில் ஒரு மாணவனுக்குப் பல ஆசிரியர்கள் கற்பிக்கின்றார்களே, இம்முறை முன்னர் இருந்ததாகத் தெரியவில்லை.

மாணவன் குறிப்பிட்ட நேரத்தில் ஆசிரியர் இருக்கும் இடத்திற்குச் செல்வான். அவர் குணத்தொடு பழகுவான். அவர் குறிப்பின் வழியே நிற்பான். ஆசிரியர் இரு என்று சொன்ன பின்னரே இருப்பிடத் தமர்வான். முந்திய நாள் படித்ததைச் சொல் என்று ஆசிரியர் கேட்க அவனும் கூறுவான். பிறகு அற்றை நாள் பாடத்தை நீர் வேட்கை மிகுந்தான் ஒருவன் எவ்வாறு தண்ணீரை ஆவலோடு பருகுவானோ அத்தகைய ஆவலோடும் விருப்பத்தோடும் கேட்டு உளத்தமைத்துக் கொள்வான். ஆசிரியர் பாடங் கற்பிக்கும்போது அசையாமல் ஆடாமல் சித்திரப் பாவைபோல இருந்து கேட்பான். இப்படி இருந்து ஆசிரியர் கூறுவனவற்றை விடாது உளத்தமைத்துக் கொள்வான். பின்னர் ஆசிரியர் போகலாம் என்ற பின்னர்ப் போய், மறுநாளும் குறித்த நேரத்தில் மீண்டும் இம்முறையே பயில்வான்.

அவ்வாசிரியனிடம் மாணாக்கன் மிகுந்த அன்புடையவனாயிருப்பான். அவர் இருக்கும் நிலைக்கு மிக நெருங்கியும் இரான், வெகு தொலைவிலும் இரான். ஆசிரியர் எவ்வகையில் மகிழ்ச்சி கொள்வாரோ அவ்வழியில் நடந்து கொள்வான். ஆனால் அறவழிக்கு மாறாகச் செல்ல மாட்டான்.

இப்படிப் பயின்றவர்களே நம் நாட்டு முன்னைய பேராசிரியர்கள் எல்லாம்.

ஓதாதுணர்ந்த ஞானியராய் விளங்கியவரும் இருந்தனரேயெனின், அவர்களும் முன்னைய பிறவிகளில் இங்ஙனம் பயின்றிருப்பர் என்று கொள்ளல் வேண்டும்.

இம் முறையெல்லாம் இக்காலத்துக்கு ஒத்து வராது எனின் இம்முறையில் உள்ள அடிப்படைப் பண்புக்கு மாறாகாமல் கால நிலைக்கும் வசதிக்கும் தகுந்தபடி மாற்றியமைத்துக் கொள்ளலில் தவறில்லை. சுருங்கக் கூறின் ஆசிரியர் நல்ல ஒழுக்கமுடையவராயிருத்தல் வேண்டும். மாணாக்கனுக்கும் கல்வியில், பருகுவனன்ன ஆர்வம் இருக்கவேண்டும். இவ்விரண்டு அடிப்படைக் கொள்கைகட்கும் மாறான வகையில் கல்வி கற்கும் முறை இருப்பின் நாட்டில் கல்வி சிறக்க வழியேயில்லை.

ஆசிரியரிடம் கேட்டவற்றைப் பின்னர் உடன் பயிலும் மாணவர்களிடம் சொல்லிப் பார்த்தும், பின்னர் அவர்களைக் கேள்வி கேட்கச் சொல்லி விடையிறுத்தும் பழகினால் மேலும் நல்ல தெளிவு பெறுவது திண்ணம்.

உடன் பயிலும் மாணவர்களிடம் சேர்ந்து அளவளாவுதல் என்பது இதற்கேயன்றி, ஒன்று கூடிக்கொண்டு யாரையேனும் புறங் கூறுவதற்கும், எள்ளி நகையாடற்கும் விளையாட்டு, படக்காட்சிகளுக்குச் செல்லுதல் முதலிய பொழுது போக்குகளுக்கும் அன்று. இளம் மாணவர்களுக்குப் படித்தலைத் தவிர வேறு வேலையென்ன இருக்கிறது? இருக்க முடியும்? மாணவன் என்றாலே தன் அறிவைக் கல்வி கேள்விகளால் மாண்பாக்கிக் கொள்ளுபவன் என்றுதான் பொருள்.

ஆகவே கற்கும் போது ஏற்படும் ஐயம் திரிபு என்ற கசடுகள் அறவே நீங்கும் முறையில் கற்றால் மட்டுமே நிறைந்த தெளிவுண்டாம். அதற்கு நல்லாசிரியரை யடுத்து மேற்குறித்த முறையில் பயிலல் வேண்டும்.

கைத்தறி ஆடைகள்

வணிகக் குறி !

—N. K. M.—

தங்க நாடா

(பதிவு)

எண் 20 முதல் 100 வரையில் வேட்டி, சேலை, துண்டு, போர்வை, மேலாடை முதலியவை பல வகைகளிற் கிடைக்கும்.

நூலாடைகட்கும் பட்டாடைகட்கும்

நம்பிக்கையான இடம் :

கருப்பண முதலியார் ஸ்டோர்ஸ்,

துணி வாணிபம்,

53, கிடங்குத் தெரு, சென்னை 1.

MADRAS

(2-ம் பக்கம் தொடர்ச்சி)

சொல்கிறான். நம்மைப்போல் அவன் காலையில் காபி அருந்துவதில்லை. அரிசிச் சோற்றை மீன் கறியுடன் விரும்பி யுண்கிறான். அரிசிக்குப் பதிலாகக் கோதுமையை அல்லது சோளத்தை உண்ணென்றோ, வாரத்திற் கொருமுறை பட்டினி கிடவென்றோ அவனை எவுவாரில்லை. எழு தினங்களுக் கென்று பங்கீடு செய்யப்பட்டு, மூன்றே தினங்களில் நம்மால் உண்ணப்பட்டு வரும் எட்டு அவுன்ஸ் அரிசி ஆறு அவுன்ஸாகி, அரிசி விலையும் இருமடங்கு ஏறப் போகிறதே என்ற கவலை அவனுக்கில்லை. 'புகர்வையரிசிப் பொம்மற் பெருஞ் சோறு கவர்படு கையைக் கழும மாந்தி' என்றமையான் தமிழன் உணவுக்குரிய பண்டம் அரிசியென்பதும், அரிசிச் சோற்றை அவன் வேண்டிய வரையில் உண்டானென்பதும் பெறப்பட்டது. விடியற்பொழுதில் உழவன் உண்ட சோறு முன்னாளிரவில், சமைக்கப்பட்டது. பழஞ் சோற்றை, ஆணத்தில் கொதித்த குழம்பில் மிதக்கும் மீன் தான்களுடன் அவன் விரும்பி உண்பதால், சிறிது மயக்கமும் அவன் தலைக்கேறுகிறது. மெய்வருத்தச் செய்யும் உழவு தொழிலுக் கேற்ற உணவன்றோ அக்கா லுழவன் உண்டது? இக் காலத்தில் பழஞ் சோற்றை அநாகரிக உணவெனத் தள்ளுவார் சிலர்; சத்துள்ளதென அதைக் கொள்ளுவார் பலர்.

நாற்று நடுவதற்கு உழவன் தன்னைச் சார்ந்த உழத்தியரோடு வயலுக்குச் சென்றான் எனத் தெரிகிறது. அவ்வாறு செல்கின்ற உழவனை நோக்கித் தோழி, சிறைப்புறமாக நின்ற தலைமகன் கேட்ப, "எம் தலைவி இப்பொழுது இற் செறிக்கப்பட்டாள். வயலை நீ உழும்பொழுது அதிலுள்ள வளமிக்க கோரைகளையும், செய்தல்களையும், களையெனக் களையாது பாதுகாப்பாய். எற்றிற்கோவெனின், காப்புச் சிறை நீக்கப் பெற்றபின் எம் தலைமகள் கோரையை வளையாகவும், நெய்தலந் தழையை உடையாகவும் பயன்படுத்திக் கொள்ளுவாள். இப்பொழுது அவள் வெளியிற் சென்று அவற்றைப் பறித்தற்கியலாது" என்று கூறி வரைவுகடாவுகின்றாள். 'வண் சாயும் நெய்தலும் ஓம்புமதி' என்றமையால், நிலத்தை உழும்பொழுதே அதிலுள்ள களைகளை உழவர் களைவது வழக்கம் போலும்.

பெரிய நெற் குவியல்களைச் சேமித்திருந்தும் அக்கால உழவர், தம் வயல்களில் மேலும் உணவுற்பத்தி செய்ய, இரவில் துயில் கொள்ளாமல், விடியற் காலையி லெழுந்து தம்மைச் சார்ந்த உழத்தியரோடுஞ் சென்று, வயலின் நீர் மிக்க சேற்றிலே நாற்று முடிகளை நட்டார்களென்றால், உணவுற்பத்திப் பெருக்கம் அக் காலத்தில் யாதொரு பிரசாரமு மின்றி நடந்தேறிற்றெனத் தோன்றுகிறது. உழுவதற்கு எருமைகளையும், தம்முடன் உழைப்பதற்குத் தம்மைச் சார்ந்தவர்களையும் உழவர்கள் பயன்படுத்திக் கொண்டார்கள். பெரு நெற்குவியல்கள் உழவருக்கு மூலதன [Capital] மாயின. அவன் உழைப்பில [Labour] அவனைச் சார்ந்தவர்களும் பங்கெடுத்துக் கொண்டனர். இதனால் சங்க காலத்தில் கிராமப் பொருளாதார நிலை இன்றைய நிலையைவிட, மிக வலிவுற்றிருந்ததென நாம் அறிகிறோம். வயல்களில் இயற்கையாய் விளைகின்ற கோரையையும் நெய்தலையுங் கூடப் பெண்கள் வளையாகவும், அணியாகவும் பயன்படுத்தினார்களென்றால், அக் கால கிராம மக்கள், எதற்கும் பிறரை நாடாமல், எளிய முறையில் இயற்கையோடியைந்த வாழ்க்கையை நடத்தினார்களெனத் தெரிகிறது. அத்தகைய கிராமங்களைக் கொண்ட நாடுதான் நாடாகும்.

"நாடென்ப நாடா வளத்தன
நாடல்ல
நாட வளந்தரு நாடு"

என்ற திருக்குறளின் கருத்தைத் தாங்கலோரியார் பாடிய மேல் 'நற்றிணைச் செய்யுள்' நன்கு விளக்குகின்றதன்றோ?

(3-ம் பக்கம் தொடர்ச்சி)

டிருந்தேன். ஆனால் மனிதனைப் பீடித்த இந்த இருள் எப்போது விலகும்?

இதோ நிற்கும் இந்த அரசு, நம்மைப்போலப் பேசும் சக்தி பெற்றிருந்தால், அது எத்தகைய உண்மைகளைச் சொல்லும்:—

"என் கம்பீர உருவத்தின் முன் இந்த மாந்தர்கள் நடமாடுவது, ஊர்வன ஊர்வதைப்போ லிருக்கின்றது. அப்படி நடமாடுவதுதான், ஏதோ ஒரு சக்தியால் ஊந்தப்பட்டு நிகழ்வதைப்போன் றிருப்பதன்றி வேறு எங்ஙனம் கொள்ளக்கூடும்.

"நான் அறிவடைந்து அறிந்த நாள் முதல், இந்தக் கிராமந்தான் எத்தனை மாறுதல்களுக் குட்பட்டிருக்கிறது. எவ்வளவு பேர் பிறந்திறந்து விட்டார்கள். என்னருகில் நிற்கும், உன் தந்தை, அவர் தந்தை, அவர் தந்தை இவர்களெல்லாம அவரவர்கள் பருவத்தில் என் நீழலில் ஓடி ஆடியவர்கள்தாம். இத் தெருப் புழுதியில் புரண்டு ஆடி, இளமை பெற்று, மூப்புற்று அதோ, அதோ தெரியும் இடுகாட்டில் எரிக்கப்பட்டவர்கள்தாம். ஆகா! அந்த இடுகாடு தான் எத்தனை பேரை எரியுண்டது!"

இத் தொழில்கள் ஓய்வில்லாது தான் நடந்துகொண்டிருக்கின்றன. இதை மனிதன் சிந்தித்தால்!

இவற்றை மனிதன் சிந்தித்தால் அதனைப் பீடித்திருக்கும் இருள் நீங்குமோ!

'வாழ்க்கை' என்பது இப்படியே சென்றுகொண்டிருப்பதால் மனிதன் செய்யவேண்டியதுதான் யாது?

சிந்திக்க மனமும், வழிகாட்டியாக எத்துணையோ சான்றோர்களின் அனுபவங்களும் நமக்கிருக்கின்றன. இவ்விருளிலிருந்து, அதிலேயே பழகி, மருள் கொண்டுள்ள அறிவினின்று விடுபட முயலுவது ஆண்மையினும் ஆண்மை யல்லவா!

பதித்து அச்சிட்டு வெளியிடுவோர்: தி. சு. பாலசுந்தரம்; குருகுல அச்சகம், மாம்பாக்கம். மதுராந்தகம் (அஞ்.)